

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை மத்திய ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய செயலாளர் கே.பி.அய்யப்பன் ஏற்பாட்டில் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் மாட்டுவண்டி எல்கை பந்தயத்தை மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் கழக அமைப்பு செயலாளர்.ஆர்.எஸ். பாரதி, புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். நிகழ்வில் பி.டி.அரசக்குமார், த.சந்திரசேகரன், கே.எஸ்.சந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன், ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து, குளவாய்ப்பட்டி சி.சண்முகம் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர ஒன்றிய நகர கிளை கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று போட்டியை கண்டு களித்தனர்.



கரூர் ஜவுளி பூங்காவில் ரூ. 70 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள, புதிய நுழைவு வாயிலை, கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், ஜவுளி தொழிலதிபர்கள், நிறுவன ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# பேரிடர் நிவாரண நிதி : தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு!

சென்னை, டிச. 22 -

தமிழ்நாட்டிற்கு பேரிடர் நிவாரண நிதியாக 11 ஆயிரத்து 155 கோடி ரூபாய் கோரப்பட்ட நிலையில், வெறும் ஆயிரத்து 651 கோடி ரூபாய் மட்டுமே ஒன்றிய அரசு வழங்கியுள்ளது.

**பேரிடர் நிவாரண நிதி பாரபட்சம் காட்டும் ஒன்றிய அரசு!**


பேரிடர் ஏற்படும் போது, ஒன்றிய அரசால் நிவாரண நிதி வழங்கப்படுவது வழக்கம். ஆனால், ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைந்தபின் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரண நிதியில் பாரபட்சம் காட்டப்பட்டு வருகிறது.

குறிப்பாக, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு பேரிடர் நிவாரண நிதி மிகவும் குறைவான அளவே வழங்கப்படுகிறது.

அதன்படி, தமிழ்நாட்டிற்காக பேரிடர் நிவாரண நிதியாக 11 ஆயிரத்து 155 கோடி ரூபாய் கோரப்பட்டது.

ஆனால், தமிழ்நாட்டிற்கு வெறும் ஆயிரத்து 651 கோடி ரூபாய் மட்டுமே ஒன்றிய அரசு வழங்கியுள்ளது. இது கோரப்பட்ட தொகையில் வெறும் 14 புள்ளி எட்டு ஒன்று சதவீதம் மட்டுமே ஆகும்.

இதுவே, பிறமாநிலங்களுக்கு அதிகப்படியான சதவீதத்தில் ஒன்றிய அரசு பேரிடர் நிவாரண நிதி வழங்கியுள்ளது. குறிப்பாக பா.ஜ.க. ஆளும் ஒடிசாவிற்கு 53 புள்ளி இரண்டு ஏழு சதவீத நிதியும், மத்திய பிரதேசத்திற்கு 31 புள்ளி 72 சதவீதம், குஜராத்திற்கு 30 புள்ளி இரண்டு ஐந்து சதவீதமும் பேரிடர் நிவாரண நிதி வழங்கியுள்ளது புள்ளி விபரம் மூலம் தெரிய வந்துள்ளது.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், மற்றும் கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி அந்தமான் யூனியன் பிரதேசம் அந்தமான் மூவர்ண பூங்காவில் நடைபெற்ற, அந்தமான் தி.மு.க. கழகம் சார்பில் கழக முப்பெரும் விழாவில் கலந்துகொண்டு தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

# குன்றத்தூரில் நல உதவிகள் வழங்கல்!

*காஞ்சிபுரம், டிச.22*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழக மாணவரணி சார்பில் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு எழிச்சூர் ஊராட்சி அரசு நடுநிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு புத்தகப்பை, பேனா, பென்சில், இனிப்பு மற்றும் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கல் நிகழ்ச்சி இன்று (22.12.2025 - திங்கள்) காலை 11 மணியளவில் எழிச்சூரில் நடைபெறுகிறது.*

*இவ்விழாவிற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.*

*ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அ.ஜமீர் வரவேற்கிறார்.*

*ஸ்ரீவித்யா ரஞ்சித்குமார், ஜெ.கோகுல்நாதன், நா.ஜெகதீசன், ஜெ.குணசேகரன், சே.பாலகிருஷ்ணன், இரா.பிரதீப், ரேவதி சதீஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இவ்விழாவில் நல உதவிகள் மற்றும் அறுசுவை உணவை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா. மோ.அன்பரசன் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.*

# சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிக்கை!



*சேலம், டிச. 22-*

*சேலம் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என்று மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று ( 22-12-2025 திங்கள்கிழமை காலை 10.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத் தலைவர் திரு.மு.ரா.கருணாநிதி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதிப் பார்வையாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள்:*

*1. வரைவு வாக்காளர் பட்டியல் (Draft Electoral Rolls - SIR 2026) சரிபார்த்தல் குறித்து,*

*2. வரும் 24-ம் தேதி மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நடைபெறும் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” குறித்து.*

*3. கழக ஆக்கப்பணிகள்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

# இணையதளத்தில் வாக்காளர் பட்டியல்!

டெல்லி, டிச. 21 –

வரைவு வாக்காளர் பட்டியலில் தங்களின் பெயர் உள்ளதா என்று 3 இணையதளங்களில் சரி பார்க்கலாம் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. எஸ்.ஐ.ஆர். பணி மூலம் தமிழ்நாட்டில் 97.37 லட்சம் வாக்காளர்களை நீக்கப்பட்ட நிலையில் தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டது. www.elections.tn.gov./SIR_2026.aspx இணையதளத்தில் தங்கள் பெயர் உள்ளதா என சரிபார்க்க லாம். voters.eci.gov.in/dowloaderoll என்ற இணையதளத்தில் தங்கள் பெயர் உள்ளதா என சரி பார்க்கலாம். electoralsearch.eci.gov.in என்ற இணையதளத்தில் தங்கள் விவரங்களை பதிவு செய்து சரி பார்க்கலாம். erolls.tn.gov.in/asd/ என்ற இணையதளத்தில் எஸ்.ஐ.ஆர். பணி மூலம் நீக்கப்பட்டவர்களின் பெயர்களை அறியலாம் என தெரிவித்துள்ளது.



நாமக்கல் மேற்கு மாவட்டம் பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதி பரமத்தி வேலூரில் தமிழ்நாடு துணை முதலமைச்சரும், திமுக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் பா.நவலடி ராஜா ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவில் மாவட்ட பொறுப்பாளர் கே.எஸ்,மூர்த்தி கலந்து கொண்டு கலைஞர் நூலகத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில் ஒன்றிய செயலாளர்கள் தனராசு, லலித்குமார், பேரூர் கழக செயலாளர்கள் முருகன், ரமேஷ்பாபு, ராமலிங்கம், கருணாநிதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி மற்றும் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்ட திமுக செயற்குழு கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம் முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



*மயிலாடுதுறை டிச 22 -*

*மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அரங்கில் இன்று 22.12.2025 மாலை 5.00 மணிக்கு மாவட்ட கழக அவைத்தலைவர் கே.ஜி. சீனிவாசன் தலைமையில் நடைபெறுகிறது கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள் , இந்நாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவும்.*

*பொருள்:*

*1. புதிதாக வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் சரிபார்த்து விடுபட்டவர்களை சேர்த்தல்.*

*2.புதிதாக சேர்க்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகள் குறித்து .*

*3. கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் கொடுக்கப்பட்டு அறிவித்தல் குறித்து தெரிவித்தல்*

*4.கழக ஆக்க பணிகள்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு 17 ஆண்டுகள் சிறை!

கராச்சி, டிச. 22 -

தோஷாகானா ஊழல் தொடர்பான 2வது வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், அவரது மனைவி புஷ்ரா பிபிக்கு பாக். நீதிமன்றம் தலா 17 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தது. பல்வேறு வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டுள்ள இம்ரான் கான் 2023ம் ஆண்டு ஆகஸ்ட் முதல் சிறையில் உள்ளார்

2021 மே மாதம் ஒரு அதிகாரப்பூர்வ பயணத்தின் போது சவூதி பட்டத்து இளவரசரால் இம்ரானுக்குப் பரிசளிக்கப்பட்ட விலையுயர்ந்த பல்கேரி நகைத் தொகுப்பை, மிகக் குறைந்த விலைக்கு விற்றது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின் போது, சுமார் ரூ.80 மில்லியன் மதிப்புள்ள அந்த நகைத் தொகுப்பிற்கு வெறும் ரூ.2.9 மில்லியன் மட்டுமே செலுத்தி, பிடிஐ நிறுவனர் அதைத் தன்வசம் வைத்துக் கொண்டார் என்று அரசுத் தரப்பு வாதிட்டது.

இம்ரான் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ராவல்பிண்டியில் உள்ள அதியலா சிறையில் நடைபெற்ற விசாரணையின் போது, சிறப்பு நீதிபதி ஷாருக் அர்ஜூமந்த் இந்தத் தீர்ப்பை வழங்கினார். இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீபிக்கும் மொத்தம் 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இருவருக்கும் தலா 16.4 மில்லியன் ரூபாய் அபராதமும் விதிக்க ப்பட்டது. சட்டத்தின்படி, அபராதத்தைச் செலுத்தத் தவறினால், கூடுதல் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

தீர்ப்புக்குப் பிறகு, இம்ரான் மற்றும் புஷ்ராவின் வழக்கறிஞர்கள் இந்த முடிவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யவிருப்பதாகத் தெரிவித்தனர்.



திருவாரூர் – கோட்டூர் தெற்கு ஒன்றியம் அக்கரைக் கோட்டகம் ஊராட்சியில் ஒன்றிய துணைச் செயலாளர் தங்கவேல் முருகன் ஏற்பாட்டில் கிளைக் கழக நிர்வாகிகள் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டமத்தில், ஒன்றிய கழக செயலாளர் வீ.எஸ்.ஆர். தேவதாஸ் பங்கேற்று ஆலோசனை வழங்கினார். அவை தலைவர் நாகையன், துணைச் செயலாளர் மகேந்திரன், , சார்பு அணி அமைப்பாளர்கள் குணசேகரன், முத்துகண்ணன், பாலா.பாலகுமாரன், நாகரத்தினம் , சத்தியா அந்தோணி மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப் பட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் சுக்கம்பட்டி ஊராட்சி பாகம் எண் 57, 58, ஆச்சான் குட்டப்பட்டி ஊராட்சி பாகம் எண் 59, ஆகிய வாக்குச்சாவடிகளில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தேர்தல் பரப்புரை நிகழ்ச்சி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர், ஏ.விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் ஒன்றிய துணைச் செயலாளர் காந்திமதி சின்னச்சாமி , முருகன் ,ஒன்றிய வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராஜேந்திரன், கிளைக் செயலாளர் ஊர் கவுண்டர் தங்கவேல், கார்த்திகேயன், ஜெமினி, முருகன், மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.